DINAKARAN

11 DEC 2022

PAGE 15

புதுவை பல்கலைக்கழகத்தில்

# பல்வேறு பாடப்பிரிவில் காலி இடங்களை நிரப்ப கலந்தாய்வு

## 16ம் தேதி நடைபெறுகிறது

புதுச்சேரி, டிச. 11: புதுச்சேரி பல்கலைக்கழ துணை பதிவாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் 2022-2023ம் கல்வி ஆண்டு கியூட் தேர்வில் தகுதிப்பெற்று முதுகலை மற்றும் முதுகலை டிப்ளமோ படிப்புக்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பல்வேறு முதுகலை மற்றும் முதுகலை டிப்ளமோ பாடப்பிரிவில் பல இடங்கள் காலியாக உள்ளன. ஒவ்வொரு துறையிலும் காலியாக உள்ள இடங்கள் குறித்த விவரம் பல்கலைக்கழக இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தரவரிசை பட்டியல் அடிப்படையில் அந்தந்த துறையில் நேரடி கலந்தாய்வு மூலம் காலி இடங்களை நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பல்கலைக்கழகத்தில் உள்ள அந்தந்த துறையில் வருகிற 16ம் தேதி காலை 11 மணிக்கு நேரடி கலந்தாய்வு நடைபெறும்.

கியூட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் கலந்தாய்வுக்கு வரும்போது அனைத்து அசல் சான்றிதழ்கள் மற்றும் நகல்களை கொண்டுவர வேண்டும்.

சீட் கிடைத்த மாணவர்கள் உடனே இணையதளம் மூலமாக கட்டணதொகையை செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.